Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
TUESDAY, FEBRUARY 06, 2023

செவ்வாய்க்கிழமை பெப்ரவரி 06, 2024 | ஒளி: 09 கதிர்: 187 | பக்கம்:06 | நகரப்பதிப்பு FREE

# ‘ஆவா’ தலைவன் கொழும்பில் கைது



வடக்கில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களில் பல்வேறான குற்றச்செயல்களில் ஈடுபட்டு, கப்பம் கோரியமை, மனித படுகொலைகளை முன்னெடுத்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த பிரபா என்றழைக்கப்பட்ட பிரபாகரன் கௌசிகன் கல்கிசை யஷோராபுரவில் உள்ள இரண்டுமாடி வீட்டில்,

தொடர்ச்சி P2



# “தலைகீழாக தூக்கி அடித்தனர்”

■ எம்.றொசாந்த் , நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் உள்ள இரகசிய அறையில் வைத்து, தன்னை தலைகீழாகத் தூக்கி, அடித்து சித்திரவதைக்கு உள்ளாகினர் என மனித உரிமை ஆணைக்குழுவில் யாழ்.பல்கலைக்கழக மாணவன், முறைப்பாடு செய்துள்ளார்.

மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தில் , கருணாகரன் நிதர்சன் எனும் மாணவன் திங்கட்கிழமை (05) முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

சம்பவம் குறித்துப் பாதிக்கப்பட்ட மாணவன் தெரிவிக்கையில் ,

“வட்டுக்கோட்டை மாவடி பகுதியில் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் என்னை வழிமறித்து, தான் மறிக்கும் போது ஏன் மோட்டார் சைக்கிளை நிறுத்தவில்லை என என்னுடன் முரண்பட்டார்.

அதற்கு நான் நீங்கள் மறித்ததைக் கவனிக்கவில்லை. எனக் கூறினேன். அதன்பின்னர் ஆவணங்களைக் கேட்டார். ஆவணங்கள் அனைத்தும் என்னிடம் உள்ளன எனக்கூறி? அவற்றை எடுத்துக் கொடுத்தபோது, அதனை வாங்கி பார்க்காது, மேலதிக பொலிஸாரை அவ்விடத்திற்கு வரவழைத்தார்.

தொடர்ச்சி P2



# ஜெய்சங்கருடன் அனுரகுமார சந்திப்பு

புதுடெல்லிக்கு விஜயம் செய்துள்ள மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் (NPP) தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை புதுடில்லியில் சந்தித்து திங்கட்கிழமை (05) கலந்துரையாடினார்.

கலாநிதி ஜெய்சங்கர் தனது ‘எக்ஸ்’ தளத்தில், “எங்கள் இருதரப்பு உறவு மற்றும் அதன் ஆழமான பரஸ்பர நன்மைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. இது ஒரு நல்ல விவாதம். இலங்கையின் பொருளாதார சவால்கள் மற்றும் முன்னோக்கி செல்லும் பாதை குறித்தும் பேசப்பட்டது” எனப் பதிவிட்டுள்ளார்.



# பாண் எடையை தேடி வேட்டை

பாண் எடையை குறிப்பிடும் வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க பாண் இறாத்தல் விற்பனை செய்யப்படுகிறதா? என்பதை கண்டறிய திங்கட்கிழமை (05) முதல் நாடு முழுவதும் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது என நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

ஜனநாயக உரிமைகளில்

# “தேவையற்ற தலையீடுகள்”

## இந்திய உயர்ஸ்தானிகரிடம் எடுத்துரைத்தார் சஜித்



இந்தியாவின் இலங்கைக்கான புதிய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட இராஜதந்திரியான ஸ்ரீ சந்தோஷ் ஜாமற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் இடையிலான சந்திப்பொன்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையே நீண்ட காலமாக நிலவிவரும் சமூக,பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்களுடன் தொடர்பான பல்வேறு விடயங்களை இருவரும் பரிமாறிக்கொண்டனர்.

அதற்கமைய, தற்போதைய அரசாங்கம் அமுல்படுத்தியுள்ள சட்டவிரோத மற்றும் நியாயமற்ற வரிக் கொள்கை குறித்த விடயங்களை எதிர்க்கட்சித் தலைவர், இந்திய உயர்ஸ்தானிகருக்கு தெரியப்படுத்தினார்.

தொடர்ச்சி P2

# 22ஆம் திகதி கால்கோள் விழா



அரசு மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் விழா பெப்ரவரி 22, அன்று ஆரம்பமாகுமென கல்வி அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

தொடர்ச்சி P2

# “மரபுக்குக் கிடைத்த மரண அடி”

நாட்டின் அதியுயர் சட்டத்தை மீறி நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தில் சபாநாயகர் கையொப்பமிட்டுள்ளதாகவும், அதற்கு எதிராக பொது எதிரணி செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் திங்கட்கிழமை (05) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஜீ.எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர்,

மனித உரிமைகளை தற்போதைய அரசாங்கம் அப்பட்டமாக மீறியுள்ளதுடன், ஒரு பொலிஸ் அரசு மற்றும் சர்வாதிகார ஆட்சியையும் நோக்கி நகர்வதாகவும் வீதிப் பாதுகாப்புச் சட்டம் இலங்கையின் அரசியலமைப்பின் படி நிறைவேற்றப்பட்ட சட்டமல்ல என தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

கூட்டத்தொடர் ஆரம்ப வைபவத்தில்

# அணிவகுப்பு மரியாதை, வேட்டுக்கள் இல்லை

ஒன்பதாவது பாராளுமன்றத்தில் ஐந்தாவது கூட்டத்தொடர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் சம்பிரதாயபூர்வமாக, புதன்கிழமை (07) காலை 10.30 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த வைபவத்தை மிகக் குறைந்த செலவில் எளிமையாகவும், நேர்த்தியாகவும் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.



© Parliament

தொடர்ச்சி P2

# வெற்று சவப்பெட்டியுடன் மயானம் சென்றார் மேர்வின்



முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உட்பட சிலர் பொரளை மயானத்துக்கு சவப்பெட்டியுடன் ஞாயிற்றுக்கிழமை (04) மாலை சென்றுள்ளனர்.

நிகழ்நிலை காப்புச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இவ்வாறு அவர்கள் சவப்பெட்டியுடன் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

காஷ்மீர் ஒற்றுமை தினத்தன்று

# ஐ.நா காரியாலயம் முன் கவனயீர்ப்பு போராட்டம்

■ நூருல் ஹுதா உமர்



காஷ்மீர் ஒற்றுமை தினமான திங்கட்கிழமை (05) கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் காரியாலயத்தின் முன்பாக பதாதைகளை ஏந்திக்கொண்டு காஷ்மீர் விடுதலைக்கான அமைப்பினர் கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெறும் அட்டூழியங்களையும், ஆக்கிரமிப்புப் படைகள் அப்பாவி காஷ்மீர் மக்களை மனிதாபிமான மற்ற முறையில் நடத்துவதையும் இவர்கள் தமது பதாதைகளில் சுட்டிக் காட்டியிருந்தனர்.

தொடர்ச்சி P2

# “மக்களை தடைச்செய்தால் சுதந்திரம் எங்கே இருக்கிறது”



“வீதிகளுக்கு தடுப்பு வேலிகளைப் போட்டு, பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டு, நாட்டு மக்களுக்கு பங்கேற்க வாய்ப்பளிக்காமல், 76ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுவது வேடிக்கையாக உள்ளது. சுதந்திர தின தேசிய நிகழ்வில் பங்கேற்பதில் இருந்து நாட்டின் பொது மக்களை தடுத்து,

தொடர்ச்சி P2

# மாலத்தீவுக்கு சீனாவின் உளவு கப்பல்; கொழும்பில் நங்கூரமிட்டது INS Karanj



கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த இந்தியாவின் அதிநவீன நீர்மூழ்கிக் கப்பலான *INS Karanj*, தனது விஜயத்தை முடித்துக்கொண்டு, திங்கட்கிழமை (05) நாடு திரும்புவதற்கு ஏற்பாடாகியிருந்து.

இந்நிலையில், மாலத்தீவுக்கு சீனாவின் உளவு கப்பல் *Xiang Yang Hong3* சென்ற நிலையில், இந்தியாவின் அதிநவீன நீர்மூழ்கிக் கப்பலான *INS Karanj* கொழும்பில் முகாமிட்டுள்ளது என இந்தியச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இந்தியாவை உளவு பார்ப்பதற்காக இலங்கைக்கு சீனா ‘ஆராய்ச்சி கப்பல்களை’ அனுப்புவதாக அறிவிக்கும். இலங்கை அரசும் சீனாவின் இத்தகைய உளவு கப்பல்களுக்கு இந்தியாவின் எதிர்ப்பை மீறி அனுமதி தந்து வருகிறது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# "தலைகீழாக தூக்கி அடித்தனர்"

இதன்போது, சிவில் உடையில் வந்த 7க்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் எவ்வித விசாரணைகளும் இன்றி என்னை வீதியில் வைத்து கடுமையாகத் தாக்கினார்கள். என்னைத் தாக்கும் சம்பவம் அருகில் உள்ள கடையில் கண்காணிப்பு கமராக்களில் கூட பதிவாகியுள்ளது. அத்துடன் நானும் எனது கைபேசியில் என்னைத் தாக்குவதனை காணொளி எடுத்தேன்.

பின்னர் என்னை பொலிஸ் வாகனத்தில் ஏற்றிச் சென்று, பொலிஸ் நிலையத்தில் உள்ள இரகசிய அறைக்குள் அழைத்துச் சென்று என்னுடைய ஆவணங்கள் , மற்றும் கைபேசி என்பவற்றைப் பறித்தார்கள்.

கைபேசியின் இரகசிய குறியீட்டைக் கேட்டபோது, அதனைத் தர முடியாது என மறுத்த போது , என் கால்களைப் பிடித்து தலைகீழாகத் தூக்கி கடுமையாகத் தாக்கினார்கள்.

என் ஆணுறுப்பைக் குறிவைத்தும் கடுமையாகத் தாக்கினார்கள். இதனால் எனக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. வியர்க்கத் தொடங்கியது. இதனையடுத்து என்னை அறையில் இருந்து, வெளியே அழைத்து வந்து கதிரையில் அமர வைத்து விட்டுச் சென்று விட்டார்கள்.

பின்னர் நான் பொலிஸ் நிலையத்தில் இருந்து வெளியேறி வந்தேன். என்னை பொலிஸாரின் இரகசிய அறைக்குள் அழைத்துச் சென்றதனை, பொலிஸ் நிலைய தடுப்பு காவலில் ஞாயிற்றுக்கிழமை (04) தடுத்து வைக்கப்பட்டு இருந்த மூவர் கண்டார்கள்.

அறைக்குள் வைத்து ,அடிக்கும் போது , நான் எழுப்பிய அவலக்குரல் அவர்களுக்கும் கேட்டு இருக்கும். அடித்த பின்னர் என்னை கைத்தாங்கலாக பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் அழைத்து வந்து கதிரையில் அமர வைத்ததையும் தடுப்பு காவலில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த மூவரும் நேரில் கண்டார்கள்.

எவ்வித குற்றமும் இழைக்காத என்னை சிவில் உடை தரித்த பொலிஸார் மூர்க்கத்தனமாகத் தாக்கி சித்திரவதைக்கு உள்ளாக்கியுள்ளனர். என்னைக் கொலை செய்யும் நோக்குடன் என் ஆணுறுப்பைக் குறித்து வைத்தும் தாக்கினார்கள்.

இந்நிலையில் எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு உள்ளமையால் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

# 'ஆவா' தலைவன் கொழும்பில் கைது

மேல்மாடியில் மறைந்திருந்தபோது, கைது செய்யப்பட்டுள்ளார் என பாணந்துறை, வலான மத்திய ஊழல் தடுப்பு தாக்குதல் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்படும்போது சந்தேகநபரின் வசமிருந்து 300 மில்லி கிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஆவா கும்பலின் இலச்சினை பொறிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர், தெள்ளிப்பழை பிள்ளையாரடி பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதான நபர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் ஆவா குழுவில் கொயின்ஸ் தம்பா எனும் பெயரில் செயற்பட்டவர் என்றும், அவருடைய இலக்கம் 001 என்றும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பாண் எடையை தேடி வேட்டை

அதன்படி, ஒரு இறாத்தல் பாணின் பரிந்துரைக்கப்பட்ட எடை 450 கிராமாக இருக்க வேண்டும் என்றும் அதன் மாறுபாடு 13.5 கிராமிற்கு குறையாமல் இருக்க வேண்டும் என குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரை இறாத்தல் பாணின் பரிந்துரைக்கப்பட்ட எடை 225 கிராமாக இருக்க வேண்டும் எனவும் அதன் மாறுபாடு 09 கிராமுக்கு குறையாமல் இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது

மேலும், பாணின் எடையைக் காட்சிப்படுத்த வேண்டும் என்றும், அனைத்து கடைகளுக்கும் பேக்கரி உரிமையாளர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பாண் விற்பனை செய்யாத வர்த்தகர்களுக்கு எதிராகத் திங்கட்கிழமை (05) முதல் முன்னெடுக்கப்படும் சுற்றிவளைப்புகளின் பின்னர் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகார சபை தெரிவித்துள்ளது.

# "தேவையற்ற தலையீடுகள்"

நியாயமற்ற முறையில் அரசாங்கம் விதித்த பெறுமதி சேர் வரியினால் மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் மற்றும் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில் உழைக்கும் மக்களின் ஊழியர் சேம நிதியங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பாதகமான விளைவுகளின் தாக்கம் குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது தெளிவுபடுத்தினார்.

மேலும், திட்டமிட்ட திகதிகளில் நடத்தப்பட வேண்டிய தேர்தல்கள் வேண்டுமென்றே ஒத்திவைக்கப்பட்டு வருவதாகவும், இந்த வருடம் தேர்தல் வருடமாக அமைந்திருந்தாலும் தற்போதைய அரசாங்கம் "நிகழ்நிலை காப்பு" என்ற சட்டத்தை நிறைவேற்றி,மக்களின் கருத்துகளைத் தெரிவிக்கும் உரிமை,தகவல் அறியும் உரிமை என்பவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும்,சமூக ஊடக வலையமைப்புகளை முடக்கும் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்த இச்சட்டத்தினால் முடியும் என்றும்,தேர்தல் வருடத்தில் இவ்வாறான சட்டமூலத்தை கொண்டு வருவதன் மூலம் மக்களின் ஜனநாயக உரிமைகளில் தேவையற்ற தலையீடுகள் பிரயோகிக்கப்பட்டு வருவதாகவும் சஜித் பிரேமதாச இதன்போது சுட்டிக்காட்டினார்.

# 22ஆம் திகதி கால்கோள் விழா



அன்றைய தினம் புதிய மாணவர்களை வரவேற்கும் வகையில் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் எவ்வித அசௌகரியங்களும் ஏற்படாத வகையில் உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சு சுற்றறிக்கை மூலம் அதிபர்களுக்கு அறிவித்துள்ளது.

மேலும், வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் மாணவர்களை அடையாளம் காணும் வேலைத்திட்டங்களை பெப்ரவரி 16ஆம் திகதிக்குள் நடைமுறைப்படுத்துமாறும் அதிபர்களுக்குக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

# "மரபுக்குக் கிடைத்த மரண அடி"

ஐக்கிய மக்கள் சக்தியினால் நடத்தப்பட்ட அமைதிப் போராட்டத்துக்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்ட நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதலைத் தாம் கண்டிப்பதாகவும் வரலாற்றில் ஒரு எதிர்க்கட்சித் தலைவருக்கு இவ்வாறு நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

மேலும், எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை உதைத்து, இந்த வீதிப் பாதுகாப்பு சட்டமூலத்தை சபாநாயகர் நிறைவேற்றினார், இது பாராளுமன்ற மரபுக்குக் கிடைத்த மரண அடி என்றும், அந்த சட்டத்தால் தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் எதிர்மறையான விளைவுகளை நாடு அனுபவிக்க நேரிடும் என தெரிவித்துள்ளார்.

# வெற்று சவப்பெட்டியுடன் மயானம் சென்றார் மேர்வின்

குறித்த குழுவினர் பொரளை மயானத்துக்குள் பிரவேசிக்க முற்பட்டபோது, பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அதனை எதிர்த்ததால் இரு தரப்பினருக்கும் முறுகல் நிலை ஏற்பட்டது.

எனினும் பாதுகாப்பு அதிகாரிகளின் எதிர்ப்பையும் மீறி முன்னாள் அமைச்சர் உள்ளிட்டோர், வெற்று சவப்பெட்டியுடன் உள்ளே நுழைந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

# அணிவகுப்பு மரியாதை, வேட்டுக்கள் இல்லை

இந்நிகழ்வில் மரியாதை அணிவகுப்பு, மரியாதை வேட்டுக்கள், வாகன பவணி, பாதுகாப்புப் பணியாளர்கள் வரிசையாக உஷாராக இருப்பது போன்ற அம்சங்கள் எதுவும் இடம்பெறாது என பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனவரி 24ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்ட பாராளுமன்றம் எதிர்வரும் 7ஆம் திகதி காலை 10.30 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

அதன் பின்னர் ஜனாதிபதியால் ஆற்றப்படும் அக்கிராசன உரை மீது, 8,9ஆம் திகதிகளில் விவாதம் நடத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# "மக்களை தடைச்செய்தால் சுதந்திரம் எங்கே இருக்கிறது"

தடை செய்தால் இங்கு சுதந்திரம் இல்லையே" என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

நிகழ்நிலை காப்பு சட்டம் என்ற பெயரில் தகவல் அறியும், அரசியல் செய்யும், கருத்துத் தெரிவிக்கும் மக்களின் உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இது சுதந்திரம் அல்ல என்றும் வங்குரோத்து இலங்கையிலும் இந்த தருணத்தில் கூட திருட்டுகள் நடந்து வருகின்றன. மருந்துப்பொருட்கள் பலவற்றில் அமைச்சர்களும் அதிகாரிகளும் திருடி, தரம் குறைந்த மருந்துப் பொருட்களை மக்களுக்கு வழங்கியுள்ளனர் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

சுதந்திர தின நிகழ்வுக்குச் செலவழிக்கப்பட்ட கோடிக்கணக்கான பணத்தைப் பாடசாலைகளின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தியிருக்கலாம் என்றாலும், அரசாங்கம் அவ்வாறான ஒன்றைச் செய்யவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் வாழ்வதற்கான உரிமையைப் பாதுகாப்போம். இதற்காக எடுக்க முடியுமான துணிச்சலான நேரடி நடவடிக்கைகளை சகலதையும் எடுப்போம்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் மாளிகை அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். ஏனைய கட்சித் தலைவர்கள் 2024 இல் கூட மக்களை ஏமாற்றி, மாளிகை அரசியலில் ஈடுபட்டு அரச மாளிகைகளின் சொகுசுகளை அனுபவிக்க வேண்டும் என்றே விரும்புகின்றனர்.ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில், நாட்டின் மாளிகைகள் நவீனத் தொழில்நுட்பம்,ஆங்கிலம் என்பன கற்பிக்கும் பெரிய பல்கலைக்கழகங்களாக மாற்றப்படும். எனவே, மாளிகைகள் பற்றிய கனவுகளை வைத்துக் கொள்ளாதீர்கள் எனவும் தெரிவித் துள்ளார்.

மேலும், மொழியை மையமாக வைத்து அரசியல் நடத்தும் காலத்தை நிறுத்த வேண்டும். நாட்டிலுள்ள 41 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு உயர் ஆங்கில மொழிக் கல்வியை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.இனம், மதம், சாதி, குல பேதங்கள் ஆகியவற்றை மையப்படுத்தி அரசியல் கோஷங்களுக்கு பணயக்கைதிகளாக இருக்க வேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

அத்துடன், பொருளாதாரப் பயங்கரவாதிகளால் வங்குரோத்தாகியுள்ள நாட்டில், சொல்லும் காரியங்களைச் செய்யலாமா என்ற விடயத்தில் சிலருக்குப் பிரச்சினை எழுந்தால், இந்த கேள்விகளை எதிர்க்கட்சியில் உள்ள அரசியல் தலைவர்களிடம் கேளுங்கள்.

ஏனையவர்கள் நன்றாகச் செய்கிறார்கள் என்று சொன்னாலும், யாரும் எம்மைப் போன்ற பணிகளை முன்னெடுக்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி எந்த அதிகாரமும் இன்றி பிள்ளைகளுக்குப் பாடசாலை ஊடாக சிறந்த வாய்ப்பை வழங்கி வருகிறது. இது எதிர்கால தலைமுறைக்கான முதலீடு. இங்கு அரசியலை முன்னெடுக்கவில்லை.

இலவசக் கல்விக்கான பக்க பலத்தை எம்மால் முடியுமான மட்டத்தில் வழங்கி வருகிறோம். பாடசாலை கல்வி அடுத்த கட்டத்தை எட்ட வேண்டிய தேவைப்பாட்டில் இருக்கிறது.

கல்வியில் நிலவி வரும் பேதங்கள் களையப்பட்டு வளங்கள் சமமாகப் பகிரப்பட வேண்டும். நகர்ப் புற பாடசாலைகள் போலவே கிராமப் புற பாடசாலைகளும் ஒரு சேர அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.



இலவசக் கல்விக்கு புது யுகத்திற்கேற்ற தேவைப்பாட்டையே ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு பிரபஞ்சம் ஊடாக முன்னெடுத்து வருகிறது. இங்கு அரசியல் முன்னெடுக்கப்படவில்லை. வாக்களிக்க முடியாத மாணவச் சமூகத்திற்கு எதிர்கால விடியலுக்கான வாயிலையே இதன் மூலம் திறந்து விட முயற்சிக்கிறோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

# மாலத்தீவுக்கு சீனாவின்...



இலங்கையைத் தொடர்ந்து மாலத்தீவும் இந்தியாவுக்கு எதிராகத் திரும்பி இருக்கிறது. மாலத்தீவின் புதிய ஜனாதிபதியான முய்சு, இந்தியா எதிர்ப்பு நிலையைத் தீவிரமாக கடைபிடித்து வருகிறார். மாலத்தீவில் முகாமிட்டுள்ள இந்திய இராணுவம் வெளியேற மார்ச் 15ஆம் திகதி வரை ஏற்கெனவே காலக்கெடுவும் விதித்துள்ளார்.

இந்நிலையில், சீனாவின் உளவு கப்பலான Xiang Yang Hong3 மாலத்தீவின் மாலே துறைமுகத்துக்குச் சென்றடைந்தது. மாலேவில் இருந்து இந்தியாவை உளவு பார்ப்பதற்காகவே இந்த அதிநவீன Xiang Yang Hong3 உளவு கப்பலைச் சீனா அனுப்பி வைத்தது என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலடி தரும் வகையில் இந்தியாவும் தமது அதிநவீன நீர்மூழ்கிக் கப்பலான INS Karanj -ஐ இலங்கை தலைநகர் கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ளது. கொழும்பு துறைமுகத்தைச் சனிக்கிழமை (03) சென்றடைந்த இந்திய நீர்மூழ்கிக் கப்பல் திங்கட்கிழமை (05) வரை அங்கு நங்கூரமிட்டிருந்தது.

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த இந்திய நீர்மூழ்கிக் கப்பலை இலங்கைக்கான இந்தியத் தூதர் சந்தோஷ் ஜா பார்வையிட்டார். மேலும் INS Karanj நீர்மூழ்கிக் கப்பலில் இலங்கை கடற்படையினர் இணைந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை சென்றுள்ள இந்தியக் கடற்படையினர் அந்நாட்டின் பல்வேறு பகுதிகளையும் பார்வையிடத் திட்டமிட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ஐ.நா காரியாலயம் முன் கவனயீர்ப்பு போராட்டம்

ஐக்கிய நாடுகள் சபையும் ஐ.நா. மனித உரிமை அமைப்பும் இவ்விடயத்தில் தலையிட்டு இரு நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகளைத் தீர்த்து வைக்க வேண்டும். சட்டவிரோத ஆக்கிரமிப்புக்கு எதிராக காஷ்மீரிகளின் சுயநிர்ணய உரிமைக்கான நியாயமான போராட்டத்திற்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதுடன் காஷ்மீர் மக்களின் நிரந்தர துயரங்களை நோக்கி உலக நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும், காஷ்மீர் மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப காஷ்மீர் பிரச்சனைக்கு ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களின் அடிப்படையில் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை வலியுறுத்துவதாகவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

மேலும், கடந்த ஏழு தசாப்தங்களாக ஆக்கிரமிப்புப் படைகள் சட்ட விரோதமாக ஆக்கிரமித்துள்ள ஜம்மு மற்றும் காஷ்மீரில் செய்த மனித உரிமை மீறல்களைக் கண்டித்த அவர்கள் காஷ்மீர் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப காஷ்மீரில் ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் பொது வாக்கெடுப்பு நடத்தப்படுவதை உறுதி செய்ய உலக நாடுகளும் கடமைப்பட்டுள்ளது என குறிப்பிட்டனர்.

# வீதி விபத்தில் ஒருவர் பலி; ஏழு பேர் காயம்



ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - கற்பிட்டி பிரதான வீதியின் குறிஞ்சிப்பிட்டி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (04) இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், ஏழு பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கற்பிட்டி - மண்டல்குடாவைச் சேர்ந்த சாஹுல் ஹமீட் எனும் 65 வயதுடைய குடும்பஸ்தரே விபத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தளத்திலிருந்து கற்பிட்டியை நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டி, எதிர்த்திசையில் பயணித்த மற்றுமொரு முச்சக்கர வண்டியுடன் மோதியே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இரண்டு முச்சக்கர வண்டிகளிலும் பயணித்த, குழந்தையொன்று உட்பட ஏழு பேர் படுகாயங்களுக்குள்ளாகி ஐந்து பேர் புத்தளம் தள வைத்தியசாலையிலும், இருவர் கற்பிட்டி ஆதார வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், சிகிச்சைக்காக புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட உயிரிழந்த நபரின் மனைவி, மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## புனர்வாழ்வு நிலையத்தில் மோதல்; இருவர் தப்பியோட்டம்

கனகராசா சரவணன்

வெலிகந்தை-கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள மோதலை பயன்படுத்தி இரு கைதிகள் தப்பியோடியுள்ள சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (04) பதிவாகியுள்ளது.

இந்த மோதலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முற்பட்ட ஒரு இராணுவ சிப்பாய் ஒருவர் மற்றும் 8 கைதிகள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் 36 பேரை கைது செய்துள்ள நிலையில், தப்பி ஓடிய இரு கைதிகளை தேடும் நடவடிக்கையில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சிகிச்சை பெற்று வந்தவர் மரணம்

எச்.எம்.எம்.பர்ஸான்



வீதி விபத்தில் படுகாயமடைந்து குருநாகல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நபரொருவர் திங்கட்கிழமை (05) உயிரிழந்துள்ளார்.

ஹபரனை பகுதியில் ஜனவரி மாதம் 8ஆம் திகதி இடம்பெற்ற வேன் - லொறி மோதி கொண்ட விபத்தில் பலத்த காயமடைந்த வேன் சாரதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மரணமடைந்த வேன் சாரதி வாழைச்சேனை தபாலக குறுக்கு வீதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 42 வயதுடைய ஜனால்தீன் ஹாபீஸ் என தெரியவந்துள்ளது.

ரணசிங்க பிரேமதாச நிர்மாணித்த

# பாலம் இடிந்து விழுந்தது



நாட்டின் மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட பாலங்களில் ஒன்று திங்கட்கிழமை (05) இடிந்து விழுந்துள்ளது.

எம்பிலிபிட்டிய - மித்தெனிய வீதியில் ஹுலந்த ஓயாவின் குறுக்கே கும்புகொடர பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட பாலமே இவ்வாறு இடிந்து விழுந்துள்ளது. இதனால் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இச்சம்பவத்தினால் சில பகுதிகளில் நீர் விநியோகமும் தடைப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற பாரவூர்தி திங்கட்கிழமை (05) காலை பாலத்தின் ஊடாகச் சென்றவேளை, குறித்த பாலம் இடிந்து வீழ்ந்துள்ளதோடு, பாரவூர்தியும் ஓடையில் வீழ்ந்துள்ளதாகவும் இதன்போது யாருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு பாலம் இடிந்து வீழ்ந்தமையினால் எம்பிலிப்பிட்டியவில் இருந்து மாத்தறை, பெலியத்த, தங்காலை நோக்கிச் செல்லும் வாகனங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1985ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட இந்தப் பாலம் முறையான பராமரிப்பின்றி வீதியின் இருபுறமும் அகலப்படுத்தப்பட்டமையினால் இடிந்து விழுந்துள்ளது என உள்ளூர் வாசிகள் தெரிவித்துள்ளனர்.

## வாய்க்காலுக்குள் வீழ்ந்த கார்



மட்டக்களப்பிலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்த கார் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி வாய்க்காலுக்குள் வீழ்ந்துள்ளது.

திங்கட்கிழமை (05) அதிகாலை இடம்பெற்ற இவ்விபத்தின்போது, காரில் பயணித்து எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை எனவும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் மூதூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## “காஷ்மீர் நட்புறவு தினம் அனுஷ்டிப்பு




காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் பாகிஸ்தானின் நிபந்தனையற்ற ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், "காஷ்மீர் நட்புறவு தினத்தை" முன்னிட்டு கருத்தரங்கு மற்றும் புகைப்படக் கண்காட்சி ஒன்றை கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்திருந்தது.

நிகழ்ச்சியை ஆரம்பிக்கும் முகமாக, பாகிஸ்தான் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் காஷ்மீர் நட்புறவு தின செய்திகள், பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின் வர்த்தக இணைப்பாளரால் வாசிக்கப்பட்டன.

இந்த விழாவில், பல வெளிநாட்டுத் தூதுவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பாகிஸ்தான் சமூகத்தினர், காஷ்மீர் நலன் விரும்பிகள் மற்றும் இலங்கை ஊடக பிரதிநிதிகள் மற்றும் முக்கிய பேச்சாளர்களாக ஷிராஸ் யூனாஸ், பொருளாதார அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் சபை உறுப்பினர் சூரியா ரிஸ்வி, செயலாளர் இளம் முஸ்லிம் பெண்கள் சங்கம் ஆகியோர் கலந்து சிறப்பித்துள்ளனர்.

பயனுள்ள உரையாடல் மூலம் காஷ்மீர் பிரச்சினைக்கு அமைதியான தீர்வினை வலியுறுத்திய அனைத்து பேச்சாளர்களும் சமய நல்லிணக்கம் மற்றும் அனைவரினதும் அமைதியான சகவாழ்வின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்துள்ளனர்.

மேலும், இந்தியா சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள ஜம்மு-காஷ்மீரில் இந்தியப் படைகள் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன், பாகிஸ்தானின் இஸ்லாமியக் குடியரசின் பதில் உயர்ஸ்தானிகர் வாஜித் ஹசன் ஹஷேமி கருத்துத் தெரிவித்தபோது, காஷ்மீர் சகோதர, சகோதரிகளுடன் தோளோடு தோள் நின்று எப்போதும் துணை நிற்போம் என்ற பாகிஸ்தான் அரசு மற்றும் மக்களின் உறுதிப்பாட்டினை வலியுறுத்தினார். இந்தியா சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள ஜம்மு-காஷ்மீர் ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக இந்தியத் துருப்புக்களின் கொடூரமான வன்முறைக்கு உட்பட்டுள்ளது. இந்த மனித உரிமை மீறல்களை உலக நாடுகள் குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபை கவனத்தில் கொள்ள வேண்டிய காலம் இதுவாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பதில் உயர் ஸ்தானிகர் கூறும்போது, “ஜம்மு-காஷ்மீர் பிரச்சினை சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டும், பாதுகாப்பு கவுன்சில் அதன் சொந்த தீர்மானங்களைச் செயல்படுத்தி பேரழிவினை தடுக்க வேண்டும். இந்தியக் கட்டுப்பாட்டில் உள்ள ஜம்மு- காஷ்மீருக்குள் இந்திய அரசின் மிருகத்தனமான செயல்களால் காஷ்மீரில் நிலவும் கொந்தளிப்பான சூழ்நிலையானது, சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை அச்சுறுத்துகிறது” என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிகழ்வின் இறுதியாக, முக்கிய பேச்சாளர்களுக்குப் பதில் உயர்ஸ்தானிகர் தமது நன்றியினை தெரிவித்துள்ளார்.

இந்தியா சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள ஜம்மு-காஷ்மீரில், இந்திய ஆக்கிரமிப்புப் படைகளின் மனித உரிமை மீறல்களை சித்திரிக்கும் படங்கள் இந்நிகழ்வின் புகைப்படக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டதோடு, இந்தியா சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள ஜம்மு-காஷ்மீரின் அழகிய பிரதேசங்கள் மற்றும் இந்திய படைகளின் வன்முறையை வெளிப்படுத்தும் டிஜிட்டல் வீடியோக்களும் இந்நிகழ்வின் போது காண்பிக்கப்பட்டுள்ளன.

# முகாமையாளர் தாக்கியதில் சீவல் தொழிலாளி மரணம்

எம்.றொசாந்த்



யாழ்ப்பாணத்தில் முகாமையாளர் ஒருவரின் தாக்குதலுக்குள்ளான சீவல் தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (04) இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம்-கரவெட்டி வடக்கை சேர்ந்த 54 வயதுடைய வேலன் பிரேமதாஸா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பனை, தென்னை வள சங்கத்திற்கு குறித்த நபர் கடந்த 28ஆம் திகதி சென்றவேளை, முகாமையாளருடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்து, முகாமையாளர் குறித்த நபர் மீது மூர்க்கத் தனமாக தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான தொழிலாளி சுகவீனமுற்று கடந்த 31ஆம் திகதி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ள நிலையில் சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக்கிழமை (04) உயிரிழந்துள்ளார்.

மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்று பரிசோதனையின் போது, கால் மற்றும் விலா எலும்புகளில் முறிவுகள் ஏற்பட்டுள்ளமையும், அந்த முறிவுகளினால் ஏற்பட்ட கிருமி தொற்று காரணமாக நிமோனியா ஏற்பட்டு, குறித்த தொழிலாளி உயிரிழந்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் முகாமையாளரை கைது செய்வதற்கான நடவடிக்கையையும் முன்னெடுத்துள்ளனர்.

## மரக்கிளை முறிந்து விழுந்ததில் மாணவன் பரிதாபமாக மரணம்

செ.தி.பெருமாள்



வெட்டிக்கொண்டிருந்த மரமொன்று மற்றுமொரு மரத்தின் மீது விழுந்ததில், அதிலிருந்து முறிந்த மரக்கிளை, வீதியில் சென்றுக்கொண்டிருந்த 14 வயது மாணவர் ஒருவர் மீது விழுந்ததில் அம்மாணவன் உயிரிழந்துள்ள சம்பவமொன்று நோர்வூட் பொலிஸ் பிரிவில் சனிக்கிழமை (03) இடம்பெற்றுள்ளது.

நோர்வூட் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 9இல் கல்வி பயின்று வரும் நியூட்டன் தோட்டத்தைச் சேர்ந்த முருகன் அஷால் மாணவனே உயிரிழந்துள்ளார். சிகை அலங்கார கடைக்கு நடந்து சென்றுக்கொண்டிருந்த போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான மாணவனை டிக்கோயா-கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காகக் கண்டி போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். இவ்வாறு கொண்டு செல்லப்படும் வழியிலேயே மாணவனின் உயிர் பிரிந்துள்ளது.

மாணவனின் சடலம் நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் உடற் கூற்று பரிசோதனை அவரது தந்தை முன்னிலையில் நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியால் மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சத்யான்ஜல் பாண்டே மட்டக்களப்புக்கு விஜயம்

எம்.எஸ்.எம். நூர்தீன்



இந்தியா பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி. சத்யான்ஜல் பாண்டே மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயமொன்றை சனிக்கிழமை (03) மேற்கொண்டுள்ளார்.

இந்தவிஜயத்தின்போது, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளதுடன், மட்டக்களப்பு காந்தி சேவா சங்கம் தலைவர் கலாநிதி அ.செல்வேந்திரன் தலைமையிலான குழுவினரையும் சந்தித்துள்ளார்.

அத்துடன், காத்தான்குடிக்கும் சென்றுள்ள சத்யான்ஜல் பாண்டே, காத்தான்குடியிலுள்ள அப்துல் ஜவாத் ஆலீம் வலியுல்லாஹ் நம்பிக்கை நிதியத்தின் பிரதிநிதிகளையும் சந்தித்துள்ளார்.

## சந்தோஷ் ஜாவை சந்தித்தார் செந்தில்

ஏ.எச். ஹஸ்பர்



புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவை, இந்திய தூதரகத்தில் கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பின்போது, கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத்தின் அபிவிருத்திக்கு தேவையான உதவிகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையின் அபிவிருத்திக்கு தனது முழுமையான உதவிகளை வழங்குவதாக இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா உறுதியளித்துள்ளார்.

# ஆடி அடங்கும் வாழ்க்கையும்; சுரண்டும் அரசாங்கமும்

பிறப்பிருக்குமானால் கட்டாயம் இறப்பிருக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமே இல்லை, இந்த பூமியில் பிறக்கும் ஒவ்வொருவரும் இறந்தேயாக வேண்டும். உயிரினங்களும் இறக்க வேண்டும். இல்லையேல், சனத்தொகை அதிகரித்து பூமி தாங்கிக்கொள்ளாது என்றெல்லாம் கூறுவர். அந்த இறப்பு எவ்வாறு அமையும் என்பது எவராலும் சொல்லவே முடியாது.

பிறக்கும் முன்னர், கருவிலேயே சிலர் கலைத்துவிடுவர், பிறப்பதற்கு முன்னரே சிசு இறந்துவிடும், பிறந்தவுடன் இறக்க நேரிடும், அதன்பின்னர், பெற்றோரின் கவனயீனத்தால் குழந்தைப் பருவத்திலேயே இறப்பு ஏற்படும். தவறுதலான செயற்பாடுகளினால் சிறுவர்கள், இளைஞர்கள் இறந்துவிடுவர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் வாழவேண்டிய வயதில் காலன் காவுக்கொண்டுவிட்டான் என்பர்.

இயற்கை அனர்த்தங்கள், விபத்துக்கள், நோய்வாய்ப்பட்டதன் பின்னர் இறந்து விடுதல், வாழ்ந்து கழித்து விட்டால் ஒரு வயதுக்கு மேல் கட்டாயம் மரணித்தே ஆகவேண்டும். வயது முதிர்வின் காரணமாகவும் இறப்புகள் நிகழும், அவ்வாறானவர்களின் மரணங்களின் போது, "ஆடி அடங்கிய வாழ்க்கை" என்பர்.

எவ்வாறு மரணித்தாலும், ஆறடி நிலமே சொந்தமாகும். தற்போதைய காலகட்டங்களில், புதைப்பதற்குப் பதிலாக, சடலத்தை எரியூட்டிவிட்டு சாம்பலை மட்டுமே சுடச்சுட கைகளில் கொடுத்துவிடுவர். அந்தளவுக்கு எல்லாமே சுருங்கிவிட்டது.

பல இடங்களில் இன்னும் புதைக்கும் சம்பிரதாயமே இருக்கிறது. இறுதிச் சடங்குகள் ஒவ்வொரு சமயங்களுக்கும் இடையில் வேறுபடும். பொதுவாக பார்க்குமிடத்து "ஆடி அடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா" என பாடியிருப்பது பொருத்தமானதாய் இருக்கிறது.

நமது நாட்டை பொறுத்தவரையில் ஊழல் மோசடியில், 115ஆவது இடத்திலேயே இருக்கின்றது. அரசு சாரா அமைப்பான 'டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல்' நிர்வாக வெளிப்படைத்தன்மை, இலஞ்சம், ஊழல் மற்றும் முறைகேடுகள் போன்றவற்றைக் காரணிகளாகக் கொண்டு 180 நாடுகளில் 2023ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலேயே இது அம்பலமானது.

ஊழல், மோசடி இல்லாத நாடுகளே இல்லை என்பதுதான் உண்மை, எரியூட்டுவதற்கான கொண்டுவரப்படும் சடலங்களுக்குக் கூடுதலான கட்டணங்கள் அறவிடப்பட்ட சம்பவமொன்று மாத்தளை மாநகர எல்லைக்குள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாநகர எல்லைக்குள் மரணிக்கும் சடலத்துக்கு 5 ஆயிரம் ரூபாய் அதிகமாகவும், எல்லைக்குள் வெளியில் மரணிக்கும் ஒருவரது சடலத்தை எரியூட்டுவதற்கு அதிகமாக 5 ஆயிரம் ரூபாயும் அறவிடப்பட்டுள்ளமை அம்பலமாகியது.

இவ்வாறான நிலையில், இறுதிச் சடங்குகளுக்கான கட்டணங்கள் கொழும்பு மாநகர சபையினால் அதிகரிக்கப்பட்டுள்ளன. 1,500 ரூபாயாக வசூலிக்கப்பட்ட தொகை, தற்போது 15 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கப் பட்டுள்ளது. 5 ஆயிரமாக இருந்த கட்டணம் 25 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார வசதி இல்லாதவர்களில் சிலர் தங்களுடைய உறவினர்களின் சடலங்களை வீட்டிலேயே வைத்திருந்த சம்பவங்களும் உண்டு.

நாட்டில் வாழமுடியாத நிலைமையே ஏற்பட்டுள்ளது. பல பொருட்களுக்கான தட்டுப்பாடு உள்ளிட்ட காரணிகளால், இறப்புகளின் சதவீதம் அதிகரிக்கக்கூடுமென அஞ்சப்படுகின்றது. இதற்கிடையில் தான் ஆடி அடங்கும் வாழ்க்கையிலும் அரசாங்கம் சுரண்டிக்கொண்டிருக்கின்றது.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

துன்பங்களை, இன்பங்களுக்குள் திணித்தலாகாது. சந்தோஷமான தருணங்களில் கூட, துன்பங்களை நினைத்து உருகிக்கொண்டிருக்கும் அல்லது புலம்பிக்கொண்டிருக்கும் பிரகிருதிகள் ஏராளம் பேர் இருக்கிறார்கள்.

துன்பங்களை, சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது எனப் பலர், தங்களின் மதிநுட்பத்தைப் பயன்படுத்துவார்கள். அல்லது, தங்களுக்கு நம்பிக்கையானவர்களுடன் ஆலோசனை செய்வார்கள். ஆனால், இத்தகைய அணுகுமுறைகளை விட்டுவிட்டு, சிலர் தமது மனம் போன போக்கின்படி, நடந்துகொள்வார்கள். இது அழிவின் பாதைக்கே இட்டுச்செல்லும்.

எந்தவொரு மனிதனின் மனநிலையும் எப்பொழுதும் ஒரே நிலையில் இருப்பதில்லை. அன்றாடம், ஏதோவிதமாக வரும் சின்னசின்ன பிரச்சினைகள் வரலாம்; அவை எவற்றையும் ஊதிப்பெருப்பிப்பது அறிவீனம்.

சுலபமாகக் கிடைக்கும், உழைப்பற்ற வருமானங்கள் நிரந்தரமானவை அல்ல; வாழ்க்கையின் உச்சத்தைத் தொட்டவர்கள், மேலான கஷ்டங்களை அனுபவித்து, அதிலிருந்து மீண்டவர்களாகவே இருப்பார்கள்.

குறிப்பிட்டவர்களுக்கு என சோதனை வருவதில்லை. சோதனைகளுக்குள் மூழ்குவது வாழ்க்கை அல்ல; எல்லாமே புதியன அல்ல; புத்திசாலிகள், அறிவுத்திறன் உள்ளவர்கள், எதுநடந்தாலும் தொடர்ந்து, சிந்தித்து, சரியாகச் செயற்பட்டு, தங்கள் வழியில் செல்கிறார்கள். துணிவுதான் மனிதனை உருவாக்குகின்றது.

நன்றி–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

# அழத் தெரியாத குழந்தை

மொஹமட் பாதுஷா

ஒரு வைத்தியரிடம் சென்று மருந்து எடுத்து, அதன்மூலம் தமது நோயைக் குணப்படுத்த வேண்டுமென்றால், அந்த வைத்தியரிடம் நோய், உபாதை பற்றிய விபரங்களை சரிவர முன்வைக்கவேண்டும். இது மக்களின் பிரச்சினைகள் விடயத்திலும் பொருத்தமானது.

இன்னுமொரு வகையிலும் இதனைக் கூறலாம். அதாவது, 'அழுத பிள்ளை பால் குடிக்கும்' என்பார்கள். அப்படியென்றால் சரியாக அழத் தெரிந்திருக்க வேண்டும். பிள்ளை பால் குடிப்பதற்காக வேண்டியே அழுகின்றது என்பதை அதனூடாக அந்தத் தாய் உணரக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

பொதுவில் இலங்கை மக்கள் இந்த விடயத்தில் மிகப் பலவீனமாக இருக்கின்றனர். எந்த சமூகமாக இருந்தாலும் நாட்டு மக்களின் பிரச்சினைகள் சரியாக ஆவணப்படுத்தப்பட்டுப் பேணப்பட வேண்டும். மக்கள் பிரதிநிதிகள், அரசியல் தலைவர்கள் அவற்றை அதிகார வர்க்கத்திடம் கொண்டு சேர்க்கும் பிரதான பொறுப்பைக் கொண்டுள்ளார்கள்.

> **இன்னும் 'படம் காட்டும்' அரசியலைச் செய்யவே விளைகின்றார்களா என்ற கேள்வியை, இந்திய நடிகைகளின் பங்கேற்புடன் அண்மையில் இடம்பெற்ற ஒரு கலாசார நிகழ்வு ஏற்படுத்தியுள்ளது**

மறுபுறத்தில், சிவில் சமூகமும் அக்கறையுள்ள ஏனைய மக்கள் தரப்பினரும் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற விடயத்தில் மிதமான ஒரு அழுத்தக் குழுவாகச் செயற்பட வேண்டியுள்ளது. ஆனால், அவர்களுக்கு எந்த மறைமுக நிகழ்ச்சி நிரலும் இருக்கக் கூடாது என்பது இங்கு முன்நிபந்தனையாகும்.

பொதுவாகச் சிங்கள மக்கள் தமது சமூகம் சார்ந்த பிரத்தியேக பிரச்சினைகளுக்காகப் போராட வேண்டியதில்லை. சிங்களப் பெரும்பான்மை நாடு என்ற செல்வாக்கு நாடாளுமன்றத்திலும், ஏனைய அரச துறைப் பதவிகளிலும் இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கான பெரும்பாலான விவகாரங்கள் இயல்பாகவே நடந்து விடும்.

நாட்டு மக்கள் என்ற அடிப்படையில் ஆட்சியாளர்கள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகளுக்கு எதிராக ஏனைய வாழ்வுரிமைப் பிரச்சினைகளை முன்வைப்பதற்கான முயற்சிகள் கடந்த காலத்தில் மிகவும் தூர்ந்து போயிருந்தன. இப்போது இதில் முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்படுகின்றது.

இருப்பினும் சிங்கள மக்களைப் பிரதானமாகக் கொண்டு இலங்கையர்கள் மேற்கொள்ளும் முன்னெடுப்புக்களின் பின்னணியில் ஏதோ ஒரு குழு இருக்கின்றது. அவர்களுக்கு ஒரு உள்நோக்கம், உள்ளதாகத் தெரிகின்றது. மறுபுறத்தில், மக்கள் போராட்டங்களை ஒடுக்குவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் அரசாங்கங்களும் செய்கின்றன.

ஆனால், ஏனைய சிறுபான்மை இனங்கள், இனக் குழுமங்கள், சமூகங்கள் சிங்கள மக்களைப்போல, காலத்தைக் கழிக்க முடியாது. எல்லாவற்றுக்காகவும் முன்னிற்க வேண்டியுள்ளது.

இவ்விடயத்தில் முஸ்லிம் சமூகம் பின்தங்கிய நிலையில் உள்ளது. அதாவது, 'அழத் தெரியாத குழந்தை' என்ற அடைமொழி முஸ்லிம் சமூகத்திற்கே மிகப் பொருத்தமானதாக அமையும்.

குறிப்பாக வடக்கு, கிழக்கின் தமிழ்த் தேசிய அரசியலின் கடந்தகால முன்னெடுப்புக்களை முஸ்லிம் சமூகம் ஒரு முன்னுதாரணமாகக் கொள்ளலாம் என்பதை இதற்கு முன்னரும் இப்பக்கத்தில் வலியுறுத்தி இருக்கின்றோம்.

முஸ்லிம் சமூகத்தின் வரலாறும் அவர்கள் இந்த நாட்டிற்குச் செய்த தியாகங்களும் சரித்திரக் குறிப்புக்களில் இருட்டடிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன. தமிழர் விடுதலைப் போராட்டத்தில் முஸ்லிம் சமூகம் எடுத்துக்கொண்ட பங்கும் மூடிமறைக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைகள், அரச நிர்வாக பதவிகளில் இடம்பெறுகின்ற புறக்கணிப்பு, விகிதாசார ஒதுக்கீட்டுப் பாரபட்சங்கள், விடுதலைப் புலிகளும் ஏனைய ஆயுதக் குழுக்களும் முஸ்லிம்கள் மீது நடத்திய தாக்குதல்கள் மற்றும் இதர மனித உரிமை மீறல்கள் முழுமையாக ஆவணப்படுத்தப்பட்டு, உலகிற்கு எடுத்துச் சொல்லப்படவில்லை.

இப்படி இன்னும் எத்தனையோ பிரச்சினைகளைப் பட்டியலிடலாம். இது விடயத்தில் கடந்தகால மற்றும் தற்கால முஸ்லிம் எம்.பிக்கள், தலைவர்கள் தவறு விட்டுள்ளார்கள் என்பது பட்டவர்த்தனமானது. இருப்பினும் சமகாலத்தில், முஸ்லிம் சிவில் சமூகத்தின் செயற்படாத் தன்மையுடனான போக்கு அரசியல்வாதிகளிற்கு சாதகமாகப் போயுள்ளது.

முஸ்லிம் பொது மக்கள் தங்களுடைய எந்தப் பிரச்சினையையும் முன்வைத்து ஜனநாயக ரீதியாகக் குரல் கொடுக்கத் தயாரில்லை. ஒரு ஆர்ப்பாட்டத்திற்கோ ஒரு பேரணிக்கோ வருவதற்குத் தயாரில்லை. ஒரு சில அமைப்புக்கள் முன்னெடுக்கின்ற முயற்சிகளை விமர்சிப்பவர்களை விட அதற்கு ஆதரவளிக்கின்ற சிவில் சமூகம் குறைவாகும்.

> **புலம்பெயர் முஸ்லிம்கள் இந்த விடயத்தில் இன்னும் சரியாக செயற்படவில்லை என்றே கூறலாம். தமிழ் டயஸ்போராக்கள் ஆற்றிய பங்கில் ஒரு சிறு பங்கையாவது முஸ்லிம் டயஸ்போரா ஆற்றவில்லை என்பது கவனிப்பிற்குரியது**

தமிழ்த் தேசிய அரசியல் தமிழ் எழுத்தாளர்கள் மற்றும் புத்திஜீவிகளின் பங்கு முக்கியமானது. ஆனால், முஸ்லிம் சமூகத்திற்கு எழுத்தாளர்கள், கலைஞர்கள் என்று சொல்கின்றவர்கள் மற்றும் விழாக்களை நடத்துகின்றவர்கள் மட்டுமன்றி, ஏன் ஒரு சில ஊடகர்களும் பெரும்பாலும் சமூகப் பிரக்ஞையுடன் இயங்குவதில்லை.

தமக்கு விருப்பமான அரசியல்வாதிக்கு சாதகமாக சமூக வலைத்தளங்களில் கருத்துப் பதிவிடுகின்ற கூட்டம், அவர் செய்கின்ற பிழையிலும் சரி காண்கின்றது. அதேநேரம், சமூக வலைத்தளம் தொடக்கம் எல்லாப் பரப்புக்களிலும் சமூக விடயங்களை பேசுகின்ற முஸ்லிம்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகும்.

2000ஆம் ஆண்டுக்குப் பிறகு பிறந்த, முன் வரலாறும், பழைய கதைகளும் தெரியாத பதின்ம வயதுப் பிள்ளைகளை நம்பித்தான் பெரும்பாலான முஸ்லிம் அரசியல்வாதிகள் பிழைப்பு நடத்துகின்றார்கள்.

முஸ்லிம் அரசியலில் பல்கலைக்கழக சமூகம், புத்திஜீவிகள் மற்றும் பள்ளிவாசல் நிர்வாகங்கள் ஒரு வகிபாகத்தை எடுக்கத் தவறிவிட்டன. முஸ்லிம் அரசியல்வாதிகளை வழிப்படுத்துவதில், தட்டிக் கேட்பதில் ஒரு அழுத்தக் குழுவாகச் செயற்படவில்லை. ஆகவே, முஸ்லிம் சமூகத்திற்குள் எந்த அழுத்தக் குழுக்களும் இல்லை.

மிக முக்கியமாக, புலம்பெயர் முஸ்லிம்கள் இந்த விடயத்தில் இன்னும் சரியாக செயற்படவில்லை என்றே கூறலாம். தமிழ் டயஸ்போராக்கள் ஆற்றிய பங்கில் ஒரு சிறு பங்கையாவது முஸ்லிம் டயஸ்போரா ஆற்றவில்லை என்பது கவனிப்பிற்குரியது.

இந்த நிலையில், முஸ்லிம் சமூகத்தின் நீண்டகால குறுங்கால பிரச்சினைகள் தீரும் என்று எந்த அடிப்படையில் நம்புவது எனத் தெரியவில்லை.

இதேவேளை, மலையக பிரச்சினைகள் பிச்சைக்காரனின் புண்ணைப்போலக் கையாளப்படுகின்றன. அவர்களிடையே ஒரு விழிப்புணர்வு ஏற்படுவது திட்டமிட்டுத் தடுக்கப்படுகின்றது. பெருந்தோட்டக் கம்பனிகளுக்கும் அவர்களது அடிவருடி தோட்ட அதிகாரிகளுக்கும் கூட இதில் பங்கிருப்பதாகத் தெரிகின்றது.

மலையக அரசியல்வாதிகள் தமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்காமல் இன்னும் 'படம் காட்டும்' அரசியலைச் செய்யவே விளைகின்றார்களா என்ற கேள்வியை, இந்திய நடிகைகளின் பங்கேற்புடன் அண்மையில் இடம்பெற்ற ஒரு கலாசார நிகழ்வு ஏற்படுத்தியுள்ளது.

ஏகப்பட்ட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டாலும் மலையக மக்களிடையே ஒரு கட்டமைக்கப்பட்ட அழுத்தக் குழுவோ அல்லது செல்வாக்குச் செலுத்தக் கூடிய அழுத்தக் குழுவோ இல்லை. இந்தியா இதில் வெறுமனே அரசியல் செய்கின்றது.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களிடையே இது விடயத்தில் சற்று முன்னேற்ற நிலை தெரிகின்றது. அவர்கள் தமது பிரச்சினைகளைச் சரிவர ஆவணப்படுத்தி, உலகின் கண்ணுக்கு முன்னே வைத்திருக்கின்றார்கள்.

> **தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் ஒன்றிணைந்த செயற்பாட்டுக்கு விடுதலைப் புலிகளும் ஒரு காரணம் என்பது நாடறிந்த ரகசியம்தான்**

இந்த ஒன்றிணைந்த முன்னெடுப்பிற்குத் தமிழ் அரசியல்வாதிகள் மட்டும் காரணம் எனக் கூறி விட முடியாது.

இதனை இப்போது நன்றாக உணரக் கூடியதாக உள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஏற்பட்ட உடைவுகள், வடக்கு, கிழக்கு தமிழ் எம்.பிக்கள் மற்றும் தமிழரசுக் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் இதனை உணர்த்துகின்றன.

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் ஒன்றிணைந்த செயற்பாட்டுக்கு விடுதலைப் புலிகளும் ஒரு காரணம் என்பது நாடறிந்த ரகசியம்தான். இதற்கப்பால் தமிழ் சிவில் சமூகம், பல்கலை மாணவர்கள் மட்டுமன்றி மிக முக்கியமாக டயஸ்போரா தமிழர்களும் முக்கியமான அழுத்தக் குழுக்களாகச் செயற்பட்டிருக்கின்றனர்.

இப்போது இந்தக் கட்டமைப்பு சற்று சிதைவடைந்து, தமிழ் மக்களின் பிரச்சினைகளை முன்வைக்கின்ற விடயத்தில் முன்னர் காணப்பட்ட பலம் குறைவடைந்து வருவதாகவே தெரிகின்றது. இதற்குள் வெவ்வேறு நோக்கங்களுடன் புதுப்புது கட்டுப்பாடுகள் உட்புகுந்துள்ளன. சமகாலத்தில், இந்தியாவை இன்னும் தமிழ் தலைவர்கள் கண்மூடித்தனமாக நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

## கடிதங்கள்

### புனரமைத்து தருமாறு கோரிக்கை



மட்டக்களப்பு- மண்முனை, மேற்கு வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கொத்தியாப்புலை பிரதேசத்திற்கான வட்டுவான் வீதி கடந்த மழை வெள்ளத்தினால் குறுக்கே உடைந்துள்ளதையடுத்து அந்த பகுதியால் மக்கள் பயணிக்க முடியாது பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த வீதியில் குளம் போல் வெள்ள நீர் தேங்கி நிற்பதுடன், அந்த பிரதேசத்துக்குக் கால்நடையாகவோ வாகனங்களிலோ பயணிக்க முடியாது, வீதியை விட்டு விலகி வயல் நிலப்பரப்பால் சென்றே வீதிக்கு மீண்டும் ஏறி பயணிக்க வேண்டியுள்ளது.

குறித்த வீதி உடைந்துள்ளமை தொடர்பாகப் பிரதேச செயலகம், பிரதேச சபை உட்பட சம்மந்தப்பட்ட அதிகாரிகள் அரசியல்வாதிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்தும் இதுவரை வீதியைப் புனரமைக்கப்படவில்லை என பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

எனவே, இது தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி இந்த வீதியைப் புனரமைத்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– கனகராசா சரவணன்

# அழிவின் விளிம்பில் நாட்டார் நிகழ்த்து கலைகள்




நிஸ்னா அசாருதீன்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்,
மூன்றாம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை

நாட்டார் வழக்காறுகளில் பல்வேறுபட்ட கலைகள் தோன்றி வளர்ந்துள்ளன. நாட்டுப்புறக் கலைகள் ஒரு சமூகத்தின் கலாசார வாழ்வினை மிக ஆழமாகப் பிரதிபலிக்கும் ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறது.

மனிதர்கள் தம்மிடையே உணர்வியல் ரீதியான கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கும், தமது செய்திகளை வெளிப்படுத்திக்கொள்வதற்கும் பயன்படுத்திக்கொண்ட ஊடகங்களே கலைகளாகும். இவை பொழுதுபோக்கிற்காக மட்டும் அன்றி மக்களின் வாழ்வியல் கூறுகளை வெளிக்கொணர்வதிலும், பாரம்பரியம் மற்றும் விழுமியங்கள் போன்றவற்றினை வெளிப்படுத்துவதிலும் முனைப்புக்காட்டுகின்றன.

இந்த வகையில், நாட்டார் கலைகள் என்று நோக்கும்போது வில்லுப்பாட்டுக் கலைவடிவமானது மிக முக்கியமானதொன்றாகக் காணப்படுகிறது. ஆரம்ப காலம் முதல் இன்றுவரை தமிழ் மக்கள் மத்தியில் வரவேற்கத்தக்க கலைவடிவமாக இது இருந்து வருகிறது. ஒவ்வொரு சமூகமும் அவர்களுக்கென சில தனித்துவமான நிகழ்த்து கலைகளை மரபாகப் பேணி வருகின்றனர்.



இந்தவகையில் மக்கள் தமது கலைத் திறனை வெளிப்படுத்துவதற்கானதொரு பிரதான ஊடகமாகவும் இக் கலைகள் திகழுகின்றன. மேலும் இந்நாட்டார் நிகழ்த்து கலை வடிவமாகிய வில்லுப்பாட்டின் தோற்றம் குறித்த காலத்தை வரையறுத்துக் கூற முடியாதுள்ளது. செவி வழியாகச் சொல்லப்படும் கதைகளில் இருந்தே இதன் தோற்றம் பற்றி ஊகித்து அறிய முடிகிறது.



பொதுவாக ஐந்து அல்லது ஆறு கலைஞர்கள் இந்த வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் பங்குகொள்வார்கள். நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்னர் மேடையில் வில்லின் முன் படைக்கப்பட்டிருக்கும் தேங்காய், பழம், வெற்றிலைபாக்கு, கற்பூரம் என்பவற்றில் இருந்து தேங்காயை உடைத்து கற்பூரம் காட்டி வழிபாடு செய்த பின்னர் வில்லுப்பாட்டினை இசைக்க ஆரம்பிப்பார்கள்.



இந்த நிகழ்த்து கலையில் முக்கிய இசைக்கருவியாக வில் பயன்படுத்தப்படுவதோடு, வில்லுக்குடம், வீசுகோல், உடுக்கை, தாளம், கட்டை, உறுமி, தக்கை முதலிய இசைக்கருவிகளும் முற்காலத்தில் இருந்தே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. தற்காலத்தில் இவற்றோடு தபேலா, மண்டிலோ, ஆர்மோனியம் போன்ற இசைக் கருவிகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.



இந் நிகழ்த்து கலைக்கு என்று ஏதும் தனிப்பட்ட பயிற்சிகள் கிடையாது. பாமரர் கலைவடிவமாகிய இது ஆரம்பத்தில் போர்க்களத்திலும் பின்னர் கோயில்களிலும் பாடப்பட்டது. நாடகத் தன்மையுடன் கதை கூறிச் செல்லும் கூற்றரங்கு முறையினையும் இது கொண்டுள்ளது. பல்வேறு பாத்திரப் படைப்புக்களின் இயல்புகளையும், சிறந்த முக பாவனைகளுடன் குறிப்பிட்ட குழுவினர் நடித்துக்காட்டும் பாங்கினையும் கொண்டுள்ளது. இங்கு பாடல் பாடும் முறையோ, சங்கீத ஸ்வரங்களின் வரிசையோ இல்லாமல் பயிற்சியில்லாத சொந்தக் குரலில் தான் பொதுவாகப் புலவர்கள் பாடுவார்கள். இது கேட்பதற்கு இரசனைக்குரிய வகையில் பார்வையாளர்களைக் கவர்ந்திழுக்கும் தன்மை கொண்ட படைப்பாகக் காணப்படுகிறது.

யாழ்ப்பாணம் இணுவில் பிரதேசத்தில் வில்லுப்பாட்டு எனும் நாட்டார் நிகழ்த்து கலை வடிவமானது இன்று அழிவின் விளிம்பை நோக்கி நகர்ந்துவரும் கலையாக மாற்றம் கண்டுள்ளது. ஆரம்பத்தில் பல்வேறு வடிவிலும் இக் கலைக்கான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுவந்தாலும் அண்மைக்காலமாக இணுவில் பிரதேசத்தைப் பொறுத்தளவில் இக் கலையினை பயிலுவதிலும், பயிற்றுவிப்பதிலும் பாரிய சவால்கள் எதிர்நோக்கப்பட்டு வருகின்றன. தனித்துவமான பல்வேறு அம்சங்களையும் இக் கலைவடிவம் கொண்டிருந்தாலும் கூட நவீன தொடர்பாடல் தொழில்நுட்ப யுகத்தின் பிடியில் சிக்குண்டு இயன்றளவிலும் பல்வேறு சவால்களைச் சம்பவித்தே வருகிறது. நாகரிக மோகத்தால் ஈர்க்கப்பட்ட இன்றைய இளம் தலைமுறையினர் இவ்வாறான நாட்டார் நிகழ்த்து கலைகளை பகிடியாக நினைத்து அலட்சியம் செய்கின்றனர்.

இதனால் அடுத்து வரக்கூடிய சந்ததிகள் மத்தியில் இந்நிகழ்த்து கலையினைக் கொண்டு நடத்துவதில் பல்வேறு சிக்கல்கள் எதிர்நோக்கப்படுகிறது.

இணுவில் பிரதேசத்தினைப் பொறுத்தளவில் வில்லுப்பாட்டு நிகழ்த்து கலையினை மக்கள் மத்தியில் நிகழ்த்திக் காட்டுவதில் கலைஞர்களுக்கான பற்றாக்குறை பிரதான சவாலாக இருந்து வருகிறது. இப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய ஒரு சில கலைஞர்கள் கூட இந்த நிகழ்த்து கலையினை ஆற்றுவதிலும், தொடர்ந்து முன்கொண்டு செல்வதிலும் பின்னிற்கும் நிலையும் எழுந்துள்ளது.

அதிலும் குறிப்பாகக் கலைஞர்களுக்கான ஊதியக் கொடுப்பனவுகளின் பற்றாக்குறை, சமூக அங்கீகாரம் குறைவாகக் காணப்படுதல், வெளி ஊர்களுக்குச் சென்று வில்லுப்பாட்டினை மேடையேற்றம் செய்வதற்கு போதுமான வாகன வசதிகளின்மை, இளம் தலைமுறையினருக்குப் பயிற்றுவிப்பதில் எதிர்நோக்கப்படும் சிக்கல்கள், சில கலைஞர்கள் வெளி நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்லுதல் போன்ற பாரிய பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுகின்றன.

மேலும், சில கலைஞர்களைப் பொறுத்தளவில் தமது பிரதான தொழிலாக இக் கலையினை மட்டுமே நம்பி வாழக்கூடிய ஒரு நிலையும் இங்கு காணப்படுகிறது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் குறித்த கலையை மட்டும் நம்பி வாழக்கூடிய கலைஞர்களது வாழ்வாதாரம் கேள்விக்குள்ளாகிறது. இதுபோன்ற பல்வேறு கோணங்களில் இக்கலைவடிவம் சார்ந்து சிக்கல்கள் இன்றுவரை எழுந்த வண்ணமே உள்ளன. இந்நிலையில், வில்லுப்பாட்டு நாட்டார் நிகழ்த்து கலையின் எதிர்காலம் என்பது கேள்விக்குள்ளாக்கப்படுவதானது அனைவரதும் சிந்தனைக்கு உட்படுத்தப்படவேண்டியதொரு அம்சமாக இருந்து வருகிறது. நவீன தொடர்பாடல் தொழில்நுட்பத்தினுடைய அபரிமிதமான வளர்ச்சியினால் எமது இளம் தலைமுறையினர் எதற்கும் துணிவோடு முன்வரக்கூடிய ஆற்றல் குறைவடைந்து, சோம்பேறிகளாக மாறி வீட்டிற்குள்ளேயே முடங்கி, தமது அறிவையும் ஆற்றலையும் நான்கு சுவர்களுக்கு உள்ளேயே மட்டுப்படுத்திக்கொள்கிறார்கள்.

இதனால் நாட்டார் நிகழ்த்து கலை வடிவங்கள் மீது அவர்களது ஆர்வம் குறைவடைந்துகொண்டு செல்லக்கூடியதொரு போக்கினை அவதானிக்க முடிகிறது. இவ்வாறான செயற்பாடானது நிகழ்த்து கலைகளை அழிவின் விளிம்பு நிலைக்குச் செல்வதற்கான பிரதான காரணியாக இருந்து வருகிறது.

கற்ற சமூகம் நினைத்தால் இவ்வாறு அருகிவரும் கலைகளைப் பாதுகாத்து அவற்றுக்கு உயிரூட்டுவது என்பது சாதாரணமான விடயமே. அது போல இன்றைய காலகட்டங்களில் எமது நாட்டில் பொருளாதாரத்தில் இருக்கக்கூடிய சிக்கல்களும் இக் கலையின் வளர்ச்சியினை வெகுவாகப் பாதிக்கக்கூடிய பிரதான காரணியாக இருந்து வருகிறது. காரணம் வில்லுப்பாட்டு நாட்டார் நிகழ்த்து கலையினை நிகழ்த்துவதற்கு வேறு பிரதேசங்களுக்குச் செல்வதில் எழும் போக்குவரத்துப் பிரச்சினை, தேவையான பொருட்களைக் கொண்டு செல்வதில் உள்ள சிக்கல்கள், புதியவர்களைப் பயிற்றுவித்து இக் கலைக்குள் உள்வாங்குவதில் உள்ள சிக்கல்கள், அதற்கான இசைக் கருவிகளைக் கொள்வனவு செய்வதில் உள்ள இடர்பாடுகள் போன்ற விடயங்கள் குறித்த கலையை மாத்திரம் அன்றி கலைஞர்களையும் வெகுவாகவே பாதித்து விடுகிறது. அது மாத்திரம் அல்லாமல் இந் நிகழ்த்து கலை மேடையேற்றம் செய்யப்படக்கூடிய நேரத்தில் அக் கலையினை அமைதியாக நுகரும் பக்குவமும், பொறுமையும் இன்றைய தலைமுறையினரிடம் குறைவடைந்து கொண்டே வருகிறது.

இவ்வாறான செயற்பாடானது வில்லுப்பாட்டுப் பாட்டினுடைய பார்வையாளர்கள் வட்டாரத்திலும் பெருமளவில் வீழ்ச்சியை ஏற்படுத்தக் காரணமாகிறது. இவ்வாறான நாட்டார் நிகழ்த்து கலைகள் தமிழ் மொழி தினப் போட்டிகள் மற்றும், இதர பாடசாலை நிகழ்வுகளிலும் அரங்கேற்றம் செய்யப்படுவதானது குறித்த கலை சார்ந்து ஆர்வமுள்ள மாணவர்களுக்கு வாய்ப்பாகவும், மேலும் இவ்வாறான நிகழ்த்து கலைகள் வளர்ந்து வருவதற்குமான அடிப்படையாகவும் இருப்பதானது வரவேற்கத்தக்க அம்சமாக உள்ளது. எது எவ்வாறு இருந்தாலும் பல்வேறு சவால்களையும் தாண்டி சில கிராமங்களில் இன்றும் கூட நாட்டார்கலைகளுக்கு ஏதோ ஒரு வகையில் கலைஞர்களால் உயிரூட்டப்பட்டு வருவதானது போற்றத்தக்க விடயமாகவே உள்ளது.

சில கிராமப் பகுதிகளில் இந்த நாட்டார் நிகழ்த்து கலைகள் காலங்காலமாக பேணப்பட்டு வந்தாலும் கூட இன்றைய நவீன காலப்பகுதியில் அவற்றை மாணவர்கள் உட்பட இளம் சமுதாயத்தின் மத்தியில் கொண்டு செல்வது என்பதும், அவர்களுக்கு அவற்றைப் பயிற்றுவிப்பது என்பதும் பாரிய சவாலாகவே இருந்து வருகிறது. இன்று சில பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் இந்நாட்டார் நிகழ்த்து கலைகள் பாட அடிப்படையில் முதன்மைப்படுத்தப்பட்டு அவற்றுக்கான அங்கீகாரமும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் சில முயற்சியாளர்களின் உந்துதல்களாலும், ஆவணக்காப்பாளர்களின் முயற்சியாலும் மருவிவரும் இவ்வாறான கலைகள் ஆவணப்படுத்தப்படுவது வரவேற்கத்தக்க விடயமாக உள்ளது. இந்த வகையில், வில்லுப்பாட்டு நாட்டார் நிகழ்த்து கலையானது இணுவில் பிரதேசத்தினுடைய புகழ்பெற்ற அண்ணாவியாரும், ஆசிரியருமான தவசோதிநாதன் அவர்களின் ஆத்மார்த்தமான உழைப்பினால் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் இன்றும் நிகழ்த்தப்பட்டுக்கொண்டு தான் இருக்கிறது.

எனவே இவ்வாறான நாட்டார் நிகழ்த்து கலைகள் உயிரோட்டம் பெற்ற நிலையில், அவை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பது இங்கு முக்கியத்துவப்படுத்தப்பட வேண்டிய விடயமாக இருந்துவருகிறது. எனவே அழிவின் விளிம்பு நிலையில் இருக்கக்கூடிய இவ்வாறான கலைகளைக் கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பு எம்மை போன்ற இளம் தலைமுறையினரின் கைகளிலயே உள்ளது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.



# தள்ளி போகிறதா தங்கலான்?

இயக்குநர் பா.ரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடித்த 'தங்கலான்' திரைப்படம் ஜனவரி மாதம் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில், பின்னர் ஏப்ரல் மாதம் வெளியாகும் என்றும் கூறப்பட்டது.

ஆனால் தற்போது வந்துள்ள தகவலின்படி, ஏப்ரல் மாதமும் இந்த படம் வெளியாவது சந்தேகம் என்று கூறப்படுகிறது.

ஏப்ரல் மாதம் பாராளுமன்ற தேர்தல் வரும் காரணத்தினால் படத்தின் வெளியீடு தள்ளி வைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. எனவே, தேர்தல் முடிந்த பின்னர் இந்த படம் வெளியாகும் என்று கூறப்படுகிறது.

தற்போது 'டப்பிங்', 'எடிட்டிங்' மற்றும் 'கிராபிக்ஸ்' பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருவதாகவும் விரைவில் ரசிகர்களின் குழப்பத்தை போக்கும் வகையில் அதிகாரப்பூர்வமான வெளியீட்டு திகதியை படக்குழுவினர் அறிவிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

விக்ரம், பசுபதி, மாளவிகா மோகனன், பார்வதி உட்பட பலர் நடிப்பில் உருவாகி வரும் 'தங்கலான்' படத்திற்கு ஜிவி பிரகாஷ் இசை அமைத்து வருகிறார்.

# விஷ்ணுவின் திருப்புமுனை

நடிகர் விஷ்ணு விஷால், சூப்பர் ஸ்டார் ரஜினியுடன் நடித்துள்ள 'லால் ஸ்லாம்' திரைப்படம் எதிர்வரும் 9ஆம் திகதி வெளியாக இருக்கும் நிலையில், இந்த படம் அவருக்கு ஒரு திருப்புமுனையை கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதுமட்டுமின்றி, அண்மையில் இயக்குநர் கோகுல் இயக்கத்தில் உருவாக இருக்கும் படத்தில் விஷ்ணு விஷால் நடிக்கவிருப்பதாகவும் இந்த படத்தில் அவருடன் இன்னொரு மாஸ் நடிகர் நடிக்கவிருப்பதாகவும் தகவல் வெளியானது.

இந்த படத்தின் படப்பிடிப்பு இன்னும் ஒரு சில மாதங்களில் தொடங்கும் என்றும் கூறப்படுகிறது.

தற்போது நடிகர் விஷ்ணு விஷால், இயக்குநர் அருண்ராஜா காமராஜ் இயக்கத்தில் ஒரு திரைப்படத்தில் நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.



அருண் ராஜா காமராஜ் ஏற்கெனவே 'கனா', 'நெஞ்சுக்கு நீதி' ஆகிய திரைப்படங்களையும் 'லேபிள்' என்ற ஹாட்ஸ்டார் வெப் தொடரையும் இயக்கிய நிலையில், அவருடைய அடுத்த படத்தில் விஷ்ணு விஷால் நடிக்க இருப்பதாக தெரிகிறது. இந்த படத்தை ரோமியோ பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்க இருப்பதாகவும் இந்த படம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.



# விஜய்யின் கடைசி படம்

தளபதி விஜய் 'தமிழக வெற்றி கழகம்' என்ற அரசியல் கட்சியை ஆரம்பித்த நிலையில், "ஏற்கெனவே ஒப்பந்தம் செய்துள்ள ஒரு படத்தை முடித்துவிட்டு முழுமையாக அரசியலுக்கு வருவேன்" என்று கூறியுள்ளார்.

இதனையடுத்து 'தளபதி 69' படம் தான் விஜய்யின் கடைசி படம் என்று அவரது ரசிகர்கள் ஒரு பக்கம் சோகத்தில் உள்ளனர்.

இந்த நிலையில், இயக்குநர் லோகேஷ் கனகராஜ் தற்போது சூப்பர் ஸ்டார் ரஜினியின் 'தலைவர் 171' படத்தை முடித்துவிட்டு 'விக்ரம் 2' மற்றும் 'கைதி 2' ஆகிய படங்களை இயக்க இருப்பதாக தெரிகிறது.

அத்துடன், விஜய்யை வைத்து அவர் 'லியோ' படத்தை இயக்கிக் கொண்டிருக்கும்போதே, 'விக்ரம் 2' மற்றும் 'கைதி 2' படங்களில் விஜய் சிறப்பு காட்சிகளில் தோன்றும் காட்சிகளை எடுத்து விட்டதாகவும் அந்த காட்சிகளுக்கான டப்பிங் பணியையும் விஜய் முடித்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

எனவே 'தளபதி 69' படத்திற்கு பின்னர் 'விக்ரம் 2' மற்றும் 'கைதி 2' ஆகிய இரண்டு படங்களில் விஜய் சிறப்பு தோற்றத்தில் நடித்த காட்சிகள் வரும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.



# மாஸ் காட்டும் சமந்தா

மாஸ் நடிகர் ஒருவர் நடிக்கவுள்ள அடுத்த படத்தில் நடிகை சமந்தா நாயகியாக நடிக்கவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

நடிகை சமந்தா 'மயோசிட்டி' என்ற நோயால் பாதிக்கப்பட்டு இருந்த நிலையில், அவர் ஏற்கெனவே நடித்து முடித்திருந்த 'சாகுந்தலம்', 'குஷி' உள்ளிட்ட படங்கள் வெளியாகின.

இந்த நிலையில், சிகிச்சை முடியும் வரை வேறு படங்களில் ஒப்பந்தமாகாமல் இருந்த சமந்தா, உடல் நலனில் முழு அக்கறை செலுத்தி வந்தார்.

தற்போது அவர் நோயில் இருந்து மீண்டு விட்டதாகவும் மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பி விட்டதாகவும் கூறப்படுகிறது.

ஏற்கெனவே ராஜ்&டிகே இயக்கத்தில் உருவாகும் 'சிட்டாடல்' என்ற வெப் தொடரில் நடித்து வரும் சமந்தா, தற்போது ராம்சரண் தேஜா நடிப்பில் உருவாக இருக்கும் அடுத்த படத்தில் நாயகியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளதாக தெரிகிறது.

புஜ்ஜி பாபு இயக்கத்தில் ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் உருவாகயிருக்கும் இந்த படத்தில் சமந்தாவும் இணைந்துள்ளதையடுத்து, இந்த படம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராம்சரண் தேஜாவின் 16ஆவது படமாக உருவாக இருக்கும் இந்த படம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு இன்னும் ஒரு சில நாட்களில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிலி

# சிலியில் காட்டுத்தீ; 112 பேர் பலி





தென் அமெரிக்க நாடான சிலியின் வினாடெல்மார் மலைப்பகுதியில் பரவிய பயங்கர காட்டுத் தீயினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 112 ஆக உயர்ந்துள்ளது.

தீயை அணைப்பதற்கு தீயணைப்பு வீரர்கள் அங்கு விரைந்து ஹெலிகொப்டர்கள் மூலம் தண்ணீரை பாய்ச்சி, தீயை கட்டுப்படுத்த முயன்று வருகின்றனர். ஆனாலும் தீ கட்டுக்கடங்காமல் எரிந்து வருகிறது.

இந்த காட்டுத்தீயால் இதுவரை சுமார் 20 ஆயிரம் எக்டேர் வனப்பகுதி எரிந்து நாசமாகியுள்ளதாகவும் அரிய வகை தாவரங்கள், விலங்கினங்கள் தீயில் கருகி மடிந்துள்ளதுடன், அதனை சுற்றியுள்ள எஸ்ட்ரெல்லா, நவிடாப் ஆகிய பகுதிகளுக்கும் இந்த தீ பரவியது. இதில் அங்குள்ள 1,200 வீடுகள் எரிந்து நாசமாகின.


இந் நிலையில், சிலியில் எரியும் காட்டுத் தீயினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 112 ஆக உயர்ந்துள்ளது. வேகமாக பரவி வரும் இந்த தீயை அணைப்பது சவாலாக உள்ளது.

எனவே தீயை அணைக்கும் பணியில் மீட்பு படையினருக்கு உதவும்படி பொதுமக்களை அந்நாட்டு ஜனாதிபதி கேப்ரியல் போரிக் கேட்டுக்கொண்டுள்ளார். வனப்பகுதியில் ஏற்பட்டுள்ள தீயை கட்டுப்படுத்தும் பணியில் தீயணைப்புப்படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்த காட்டுத்தீ காரணமாக இனிவரும் நாட்களில் வெப்பநிலை 104 டிகிரி வரை அதிகரிக்கும் என வானிலை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

ஐஸ்லாந்து

## எரிமலை சீற்றத்தால் வீடு திரும்ப முடியாது திணறும் மக்கள்



வட ஐரோப்பாவில் உள்ள தீவு நாடு, ஐஸ்லாந்து. இதன் தலைநகரம் ரெக்ஜெவிக். பனிப்பாறைகளாலும், எரிமலைகளாலும் சூழப்பட்டுள்ளதால், நெருப்பு மற்றும் பனியாலான நாடு (Land of fire and ice) எனவும் ஐஸ்லாந்து அழைக்கப்படுவதுண்டு.

ஐஸ்லாந்து நாட்டு மக்களின் வாழ்க்கை முறையில், எரிமலைகளிலிருந்து 'லாவா' (lava) எனப்படும் எரிமலை குழம்புகள் வெளிக்கிளம்புவதும், அவற்றின் சீற்றம் குறைந்த பிறகு ஊரை சுத்தப்படுத்தி மீண்டும் குடியேறுவதும் வழக்கமான ஒன்று. சில தினங்களுக்கு முன், இந்நாட்டின் க்ரிண்டாவிக் (Grindavik) பகுதியில் எரிமலைக்குழம்பு பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது.

இதையடுத்து, அப்பகுதியில் வாழ்ந்த சுமார் 3,800 பேர், தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி விட்டனர். இம்முறை க்ரிண்டாவிக் பகுதியில் எரிமலை குழம்பு மொத்த ஊரையும் நாசம் செய்து விட்டதால், மீண்டும் அங்கு குடியேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நகரின் பல இடங்களில் நீண்ட தூரத்திற்கு பூமியில் பிளவு ஏற்பட்டு அதிலிருந்தும் லாவா வெளியேறியது. க்ரிண்டாவிக் பகுதிக்கு அருகே உள்ள ஸ்வார்ட்ஸெங்கி புவிவெப்ப மின் நிலையத்திற்கு (geothermal power plant) உள்ளே லாவா செல்வதை தடுக்கும் வகையில், அதற்கு வெளியே அரசு, தடுப்புகள் அமைத்துள்ளது.

இந்நகரின் 3 வீடுகளை லாவா மூழ்கடித்த காட்சிகளை தொலைக்காட்சியில் கண்ட மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இயற்கையின் சீற்றத்தால் வீடுகளை விட்டு வெளியேறி மீண்டும் குடிபுக முடியாத நிலையில் உள்ள மக்களில் பலருக்கு வீடுகளின் பேரில் வங்கி கடன் உள்ளதால், தங்கள் வாழ்வாதாரம் என்ன ஆகுமோ எனும் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

ஜம்மு–காஷ்மீர்

## காஷ்மீரில் கடும் பனிப்பொழிவு

ஜம்மு-காஷ்மீரில் கடந்த சில நாட்களாக கடும் பனிப்பொழிவு நீடித்து வருகிறது.

தொடர் பனிப்பொழிவின் காரணமாக அங்கு விமான சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

சனிக்கிழமை (03) நள்ளிரவு முதல் தொடர்ந்து பனிப்பொழிவு நீடித்து வரும் நிலையில், விமான ஓடுபாதைகளில் பனி படர்ந்துள்ளது.

இதனைத்தொடர்ந்து, மும்பையிலிருந்து ஸ்ரீநகர் செல்லும் 4 விமானங்களும், லே செல்லும் 2 விமானங்களும் இரத்து செய்யப்பட்டுள்ளதாக இண்டிகோ நிறுவனம் அறிவித்துள்ளது.

மேலும், பனிப்பொழிவால் வீதிகளில் பனி படர்ந்துள்ளதால் அவற்றை அப்புறப்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. வாகன ஓட்டிகள் கவனமாக செல்லவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.




பாகிஸ்தான்

## முகமது குரேஷிக்கு 5 ஆண்டுகள் தடை

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் நெருங்கிய உதவியாளர் முகமது குரேஷி. இவர், வெளியுறவு அமைச்சராக இருந்தபோது அரசு ரகசியங்களை கசிய விட்டதாக குற்றம்சாட்டப்பட்டது. இதுதொடர்பான வழக்கில் கடந்த 30ஆம் திகதி இம்ரான் கான் மற்றும் முகமது குரேஷி ஆகிய இருவருக்கும் தலா 10 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதனையடுத்து, அடுத்த 5 ஆண்டுகளுக்கு முகமது குரேஷி தேர்தலில் நிற்க தடை விதித்து பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. எதிர்வரும் 8ஆம் திகதி பாகிஸ்தானில் பொதுத்தேர்தல் நடைபெற உள்ளமை குறிப்பிடத் தக்கது.



அசாம்

## "கட்டணம் இல்லாத மின்சாரம்"

இந்தியப் பிரதமர் மோடி இரண்டு நாள் சுற்றுப் பயணமாக அசாம் மாநிலம் சென்றிருந்தார். சுமார் 11,599 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், முடிந்த திட்டங்களை திறந்து வைத்தார்.

அப்போது பிரதமர் மோடி பேசும்போது கூறியதாவது,

"கடந்த 10 ஆண்டுகளில் அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் வழங்க வேண்டும் பிரசாரத்தை நோக்கி ஓடினோம். தற்போது நாங்கள் கட்டணம் இல்லாமல் அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் வழங்க வேண்டும் என்ற அடுத்த நகர்வை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம்.

இந்த பட்ஜெட்டில் மிகப்பெரிய அளவில் வீட்டின் மேற்கூரை மீது சூரிய ஒளியில் மின்சாரம் தயாரிப்பதற்கான சோலார் தகடுகள் அமைப்பது குறித்து மிகப்பெரிய அறிவிப்பு வெளியிட்டுள்ளோம். இந்த திட்டத்தின் கீழ், ஒரு கோடி குடும்பங்களுக்கு சோலார் தகடுகள் அமைப்பதற்கு மத்திய அரசு உதவி புரியும்.

மேலும், ஒவ்வொரு இந்திய குடிமகனின் வாழ்க்கையையும் வசதியானதாக்க வேண்டும் என்பதுதான் அரசின் இலக்கு. மத்திய அரசின் பட்ஜெட்டில் இது தெளிவாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது. பட்ஜெட்டில், 11 இலட்சம் கோடி ரூபாய் கட்டமைப்புகளை உருவாக்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது" என தெரிவித்துள்ளார்.



ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒற்றை டெஸ்டை

# வென்ற இலங்கை

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒற்றை டெஸ்ட் போட்டியை இலங்கை வென்றது.

கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான இப்போட்டியின் நேற்றைய நான்காம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 199 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த ஆப்கானிஸ்தான், கசுன் ராஜித, பிரபாத் ஜெயசூரிய, அசித பெர்ணாண்டோவிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 296 ஓட்டங்களையே பெற்றது.

இப்ராஹிம் ஸட்ரான் 114, ரஹ்மத் ஷா 54, நூர் அலி ஸட்ரான் 47, நசீர் ஜமால் ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் பிரபாத் ஜெயசூரிய 5, அசித பெர்ணாண்டோ 3, கசுன் ராஜித 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.




பதிலுக்கு 56 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக பிரபாத் ஜெயசூரிய தெரிவானார்.



## புத்தளம் 'லவ் பேட்ஸ்' அணி சாம்பியன்

எம்.யூ.எம்.சனூன்

76ஆவது சுதந்திர தினமான ஞாயிற்றுக்கிழம (04) புத்தளம் Bio Plus பாமசியினால் நடாத்தப்பட்ட அணிக்கு ஏழு பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுத் தொடர் புத்தளம் நாகாஸ் மற்றும் ப்லாஸ்டர்ஸ் மைதானங்களில் நடைபெற்றன.

மொத்தமாக 16 அணிகள் பங்கு பற்றிய இந்தத் தொடரில் புத்தளம் லவ் பேட்ஸ் அணி சாம்பியன் பட்டத்தை பெற்றுக் கொண்டது. அதே நேரம், மான் கராத்தே அணி இரண்டாம் இடத்தை தக்க வைத்துக்கொண்டது.

சிறந்த துடுப்பாட்ட வீரராக லவ் பேட்ஸ் அணியின் லிபிசன், சிறந்த பந்து வீச்சாளராக மான் கராத்தே அணியின் சாதிக் தெரிவு செய்யப்பட்டனர். சிறந்த தொடர் ஆட்ட நாயகனாக லவ் பேட்ஸ் அணியின் லிபிசன் தெரிவு செய்யப்பட்டார்.













## கொழும்பு றோயல் அணி சாம்பியன்









கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் வருடாந்த சிநேகபூர்வ மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி "கோட்டே அங்கம்பிட்டிய" மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (04) இரண்டாவது தடவையாகவும் நடைபெற்றது.

இதில் கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் அங்கத்தவர்கள் அடங்கிய 8 அணிகள் போட்டியிட்டன. இறுதிப் போட்டியில் கொழும்பு றோயல் அணி சாம்பியன் கிண்ணத்தை வெற்றிக் கொண்டது.

இப்போட்டியில் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ, அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

-எம்.நஸார்

## "களுத்துறை வுளுஸ்" அணி சம்பியன்

எஸ்.அஷ்ரப்கான்

வியாங்கல்லை கிறீன் லைன் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் வியாங்கல்லை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியிலே களுத்துறை வுளுஸ் அணியினரை எதிர்த்து கொழும்பு ஸ்மாஸ் அணி மோதியது. இதில் 2-1 என்ற கோல் வித்தியாசத்தில் களுத்துறை வுளுஸ் அணி சம்பியனாக தெரிவானது.

சம்பியன் அணிக்கு இரண்டு இலட்சம் ரூபாய் பணப்பரிசும் கிறீன் லைன் வெற்றிக் கிண்ணமும், 2ஆம் இடத்தினைப் பெற்ற அணிக்கு ஒரு இலட்சம் ரூபாய் பணப் பரிசும் கிண்ணமும் வழங்கப்பட்டது.







மேலும் இந்த தொடரின் அதிகூடிய கோல்களை பெற்ற வீரருக்கு பத்தாயிரம் ரூபாயும் கிண்ணமும், சிறந்த கோல்காப்பாளருக்கு பத்தாயிரம் ரூபாயும் கிண்ணமும் ஒழுக்கமான அணிக்கு ஐயாயிரம் ரூபாயும் வழங்கப்பட்டன.

இறுதி நாள் நிகழ்வுகள் கிறீன் லைன் விளையாட்டுக் கழகத்தின் தவிசாளர், லெப்டினன் ஏ.எம்.எம்.கியாஸின் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம அதிதியாக டாக்டர் எம்.எச்.எம்.றூமி, கௌரவ அதிதிகளாக அல்-ஹாஜ் எம்.எஸ்.எம்.ஜெஸ்லான், மேல் மாகாணசபை முன்னாள் உறுப்பினர் அல்-ஹாஜ் இப்திகார் ஜெமீல் கலந்து சிறப்பித்தனர்.





விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 06 பெப்ரவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.